1972 மார்ச் 23]

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, நீதிமன்றத்தின் தீர்ப்பு வருகிற வரையில் அரிசி அப்படியே வைக்கப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி வைத்திருந்தால் அரிசி கெட்டுவிடுமே, ஆகவே அதற்கு வேண்டிய வழிவகைகளை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நீதிமன்றத்தின் தீர்ப்பு வருகிற வரையில் அரிசியை எடுத்து உபயோகிக்க முடியாது. அப்படி உபயோகித்துவிட்டால், நீதிமன்றத்தின் தீர்ப்பு வியாபாரிக்குச் சாதகமாக இருந்துவிட்டால் நாம் உபயோகித்த அரிசி—முதல் தரமோ இரண்டாம் தரமோ—திருப்பி கொடுக்கவேண்டியிருக்கும்.

திரு கே டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, தவறுதலான வழிகளில் நடக்கக்கூடிய வர்த்தகர்களை—அதாவது இப்போது சொன்னார்களே திரு. கிருஷ்ண செட்டி போன்றவர்களை—அரசின் 'பிளாக் லிஸ்டில்' வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே. அப்பேர்பட்டவர்கள் கணக்குகள் சரியாக வைக்கவில்லையென்பதாகப் புகார். கணக்கு சரியாக வைத்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில்லை. ஆகவே அவர்களை 'பிளாக் லிஸ்டில்' வைக்கத் தேவையில்லை. மேலும் அரசாங்கம் வாணிபத்திற்கு ஒன்றும் தருவதில்லை. அப்படி கொடுப்பதாய் இருந்தால் அது பற்றி பரிசீலிக்கலாம்.

Quartz crushing factory at Jagir Ammapalayam

* 656 *Q.*—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that Government Quartz Crushing Factory at Jagir Ammapalayam, Salem has been closed;

(*b*) the steps taken to reopen it; and

(*c*) the compensation paid to the affected workers ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) டான்சி படிக்கல் பொடி செய்யும் தொழிற்சாலையைத் திறந்து நடத்தும் உத்தேசம் இல்லை.

(உ) தொழில் தகராறுகள் சட்டத்தின்கீழ் கொடுக்கப்பட வேண்டிய ஒரு மாத கால அறிவிப்புக்குப் பதிலாக ஒருமாத சம்பளமும், ஆட்குறைப்பு நட்ட ஈட்டுத் தொகையும் வேலையிழந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. மொத்தம் கொடுக்கப்பட்ட நட்ட ஈட்டுத் தொகை ரூ. 3,739·40 (ரூபாய் மூன்றுயிரத்து எழுநூற்றி மூப்பெத்தொன்பதும் பைசா நாற்பது மட்டும்).

திரு கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, சேலத்திற்கு அருகில் இருக்கக்கூடிய 'க்வார்ட்ஸ் க்ரஷிங் பேக்டரியில்' எத்தனை பேர் பணியாற்றினார்கள் ? அவர்கள் பணியாற்றிக்கொண்டிருந்த நேரத்தில்

நோய்வாய்ப்பட்டு, 'இண்டஸ்ட்ரியல் டிஸீஸ்' ஏற்பட்டதனால் எத்தனை பேர் இறந்தார்கள்? அப்படி இறந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்த பேக்டரி மூடும்போது பணியாற்றிக்கொண்டிருந்தவர்கள் 17 பேர். இறந் தவர்கள் எண்ணிக்கை பற்றிய கணக்கு விவரம் இல்லை.

திரு கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்தத் தொழிற் சாலையில் 30 பேர்கள் வரையிலும் பணியாற்றினார்கள் என்றும், பணி யாற்றிய காலத்தில் நோய்வாய்ப்பட்டு இறந்தார்கள் என்றும் சொல்லப் படுகிறது. அப்படி இறந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டு மென்று கோரி அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா? அப்படி ஏதேனும் மனு செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி அனுப்பினால் உயிர்நீத்தவர் களுக்கு ஏதாவது நஷ்ட ஈடு தரப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அந்தத் தகவல் எனனிடத்தில் இல்லை.

Survey of Small Scale Industries

* 657 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Institute of Fundamental Economic Research, New Delhi has undertaken any market survey of the Small Scale Industries and the Financial Investment in this State during July 1971; and

(*b*) if so,the details there of?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) அரசிடம் இதுபற்றி தகவல் ஏதுமில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

பாலங்கள்

*658 வினா—திரு என். இட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் காவிரியின் குறுக்கே புதிதாக ஏதேனும் பாலங்கள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: ஆம்.